**செ. கு. எண்: 131** **நாள்:16.10.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 16.10.2019

**2019**-ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆய்வுக் கூட்டம் எனது தலைமையில் **23.9.2019** அன்று நடைபெற்றது. இன்றிலிருந்து தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை துவங்கிய காரணத்தினால், அனைத்து மாவட்டங்களுக்கும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் கண்காணிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி, முன்னெச்சரிக்கை, பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள நான் உத்தரவிட்டுள்ளேன்.

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், செம்பாட்டூர் கிராமத்தில் **15.10.2019** அன்று இடி தாக்கியதில், குளத்தூர் வட்டம், வைத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. எத்திரால் என்பவரின் மனைவி திருமதி சாந்தி, திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி திருமதி விஜயா, திரு. ராமச்சந்திரன் என்பவரின் மனைவி திருமதி கலைச்செல்வி மற்றும் திரு. லெட்சுமணன் என்பவரின் மனைவி திருமதி லட்சுமியம்மாள் ஆகிய நான்கு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், க.எறையசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சொக்கையா என்பவரின் மகன் திரு. வேலு என்பவர் **15.10.2019** அன்று மின்னல் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், நசரத்பேட்டை கிராமத்தில் மரம் வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த களியனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாயாண்டி என்பவரின் மகன் திரு. கோபி என்பவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இடி, மின்னல் காரணமாக உயிரிழந்த மேற்கண்ட ஆறு நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு **தலா நான்கு லட்சம் ரூபாய்** மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**